உ

சுபமஸ்து.

தமிழகம்.

வால்யூம். 1 | 1905-ஞ் மார்ச்சுமீ | நம்பர். 3.

சரீர தத்துவவிளக்கம்.

(33-ம் பக்கத்தொடர்ச்சி.)

இது நிற்க; முக்கியமாய் இந்த சரீரகுண விசேடங்களைப் பற்றி விரித்துச் சொல்லுமுன்னமே நாம் கவனிக்கவேண்டிய சில சிறு விஷயங்கள் உண்டு. அவற்றைச் சிறிது அவசரமாகவே கவனித்துப் பின்பு சாவகாசமாய் உட்பொருட் பிரிவுகளைப் பகுந்துப் பார்ப்போம். முதல்முதல் பற்பல பொருள்களின் வளர்ச்சியை நோக்குவோம். மலைகள் வளர்கின்றன. மரங்கள் வளர்கின்றன. விலங்குகள் வளர்கின்றன. ஆனல் இவ்வெல்லாம் ஒரேவிதமாய் வளர்கின்றனவோ? இல்லை: உதாரணமாக,—ஒரு பீங்கானில் சுத்தசலம் விட்டு எவ்வளவு கரையுமோ அவ்வளவு உப்பையும் கரைத்துப் பின்னும் ஒரு உப்புக்கல்லை ஒரு நூலில் கட்டி இங்க...

நாளடைவில் சலம் வற்றிப்போய் நூலில் கட்டிய உப்புக்கல்லைச் சுற்றி முன் சலத்தில் கரைந்துள்ள உப்பு கனப்பொருளாய் விளங்குகிறதல்லவா? இத்திருஷ்டாந்தத்தில் உப்பு உப்பாகவே இருந்து உரைமேல் உரையிட்டு உருவத்திலும், பளுவிலும் அதிகரிக்கின்றது. நல்லது! தாவரவளர்ச்சியைச் சற்றுக் கவனிப்போம். தாவரவளர்ச்சி விநோதமானது. தாவரங்கள் நன்ருய் வளரும்படி நாம் செய்வதைக் கவனிப்போம். எரு விட்டுப் பயிரை வளர்ச்சிசெய்கின்ருேமல்லவா? எருவிட்டால், தாவரம் வளர்வானேன்? தாவர பதார்த்தங்களுக்கும், தாது பதார்த்தங்களுக்கும் உள்ளபேதம் இங்கு ஆரம்பிக்கின்றது. தாவரங்களுக்கு ஓர் குணமுண்டு. அதென்னவெனின், தாதுக்களை யுட்கொண்டு தன்னிடத்துள்ள ஓர் சாமர்த்தியத்தால் அத்தாதுக்களையும் தாவரரூபமாய் மாற்றிக்கொள்ளும். இன்னும் மேன்மேலும் மொத்தையாகச் சேர்வதினுலேயே தாதுக்கள் வளரக்கூடுமென்று சொன்னேமல்லவா? ஒரு மரம் வளரும் விதத்தை நாம் இப்போது கவனிப்போம். பூமிக்குள் ஆழ்ந்து பல திக்குகளிலும் வியாபித்துப் பூமியிலுள்ள தாதுப்பொருள்களையெல்லாம் வேர்கள் உட்கொள்ளுகின்றன. சலத்தையும் அவ்வேர்களே ஆகரிஷிக்கும். அதன்றி, இலைகள் வாயுரூபமாய் உள்ள உணவுப்பொருள்களை தங்களிடத்தமைந்துள்ள கோடானுகோடி துவாரங்களால் சேகரித்துக்கொள்ளும். சில மரங்களில் பட்டைவழியாய்த்தான் ஊட்டம் அவைகளுக்குச் செல்லும். (இம்மரங்கள் பெரும்பாலும் பாலுள்ளவைகள்.) சில மரங்களிலோ என்ருல் மரத்தின் உட்புறத்தின் நடுவினின்றே சாருனது மேலே சென்று அடிமரம், கிளை, இலை, பூ, காய், முதலிய உறுப்புகளுக்கும் உணவாகும். இன்னும் தாது தாவரப்பொருள்களின் வளர்ச்சிக்கு வரையேயில்லை. வெட்டப்படாமலும், அழிக்கப்படாமலும் இருக்கிறவரையில், வளர்ந்துகொண்டே இருக்கும். (இரு தோற்றங்களிலும், விதிக்கு விலக்கானவைகள் பலவுள ஆயினும், பொதுவிதியின் அவசிய இலக்ஷணம் கூறவேண்டியதே.) இவ்வித வளர்ச்சி இருந்தபோதிலும், அவை இரண்டும் இடம் பெயர்ந்துபோகாது, உள்ளவிடத்தே நின்று வளர்வனவன்ருே? ... வெங்கினமும் இத்தன்மையதோ?

அங்குமிங்கும் ஓடியாடுதல்; அதாவது, சலித்தல் ஒன்று.
போம்வழியில் தடையேதேனும் இருந்தால், அதை மீறி
ஒக்கியுமாவது செல்லலும், இல்லாவிட்டால் தான் வேறு
ட் போதலும் அவைகளுக்கு இயற்கை. தன் இரையை
ரிவதும் தன்னை யிரையாகக்கொள்ளும் பெரும் பிரா
இருப்பிடத்தைச் சுபாவமாய் அறிந்தவற்றினின்றும்
ம் ஒன்று. தன்னினத்தை அழிந்துபோகாமல் காப்ப
வம்சவிருத்தி செய்வதும் ஒன்று. மேலும், பிராணிகள்
பாதும் மரஞ்செடிகளைப்போலத் தாம் இருக்குமளவும்
ந்துகொண்டே இருக்கிறதில்லை. அதன்றியும், வளரும்
தும் ஒரேசீராய் வளருவதும் இல்லை. சிற்சிலகாலத்தில்
திகமாய் உணவை யுட்கொண்டு உடலையும் வளர்க்கின்றன.
ன்னர் சிலகாலம் அழிவு, வளர்ச்சி இரண்டும் தோன்றாமல்
பிர்த்திருக்கின்றன. மறுபடியும், சிற்சில காலங்களில் சிற்
ல உறுப்புக்களைப் பெருக்கச்செய்கின்றன. கடைசியாக,
ரவில்லாமல் செலவுசெய்யும் சிறுபுத்தியுடையவர்போல்,
தாமே அழிகின்றன. ஆகையால், வளர்ச்சி முதலிய குணங்க
ளில் இவ்வளவு பேதம் தாது தாவரவர்க்கங்களுக்கும் ஜீவராசி
களுக்கும் உள்ளனவெனக் கண்டோம். இப்போது அனை
வரும் அறிந்த வேறொரு குணத்தைப் பார்ப்போம்.

நாம் போகும் வழியில் ஒரு நாய் அசைவற்றுக் கிடக்குமா
யின், உடனே நமக்கு ஒரு சந்தேகம் உதிக்கின்றது. 'ஐயோ!
அது செந்துப்போயிற்றோ?'-என்கிறோம். ஆனால், இறந்ததா,
இல்லையா, என்று நிச்சயிக்கும்பொருட்டு நாம் செய்வதென்ன?
விலாக்கள் சீர்ப்பிரமாணமாய்ப்புடைக்கின்றனவோ? அடிவயிறு
ஒழுங்காய் முன்னும் பின்னும் விம்மியும் சுருங்கியும் இயலு
கின்றதோ? என்று முதலில் பார்க்கிறோமல்லவா?—இது எதற்
காக? மூச்சு இருக்குமாயின், இத்தோற்றங்களும் இருக்கும்,
என்று நமக்குத் தெரியுமாகையாலல்லவா? ஆகையால், சுவாச
முண்டாகும் விதத்தைப்பற்றி நாம் பின்னால் சொல்லவேண்டும்.
அது இருக்கட்டும். வழியில் கிடந்த நாயை ஒரு பறையன்
கையாலெடுத்து "சாமி! சில்லிட்டுப் போச்சு," என்று சொல்
லுவானாகில், இனிச்சந்தேகமில்லை, நிச்சயமாய் மரித்துப்போய்
விட்டது என்கிறோம். என்? இரத்தவோட்டம் உடம்பில்
இருக்குமட்டும் உடம்பு உஷ்ணமாயிருக்கும்; உயிரும் இருக்

கும். இரத்தவோட்டம் நின்றால், உயிர்ச்சேதமாகும் ...
ன்றோ? ஆகையின், இரத்தவோட்டம் எப்படி நடந்துகொ...
ருக்கிறது? என்பதை நாம் விசாரிக்கவேண்டும். இ...
செத்தநாய் விறைத்துப்போமல்லவா? ஏன் விறை...
கின்றது? உறுப்புக்களையெல்லாம் நீட்டவும் மடக்க...
பின், மேல்கீழ், வலம்இடம், திருப்பவும் கூடும்படிக்கு...
புகளைத்தக்க விதமாய்ச் சேர்த்துக் கட்டும் தசைநார் ...
லில் உண்டு என்று தெரியுமே? அத்தசையிலுண்டாகும் ...
தினால் தேகம் விறைத்துப்போகின்றது. இத்தகைய தசை...
இயற்கையும் நாம் அறியவேண்டும்.

விளக்கைப் பார்த்ததும் குழந்தை கையை நீட்டுமன்றே...
தவறிப்போய்ப் பட்டுவிட்டால், கையைச் சரேலென்று பி...
வாங்கி அழத்தொடங்கும். இப்படிப் பார்த்ததும் கை...
நீட்டுவானேன்? சுட்டதும் கையைப் பின் வாங்குவானேன்...
இதை அறிய நாம் நரம்புகளின் இயற்கையைப் பற்றித் தெரி...
துகொள்ளவேண்டும். இதுவுமன்றி, எல்லா அவயவங்களை...
யும் தாங்கும் எலும்புக்கூடு ஒன்று உளது என்பது நமக்குத்
தெரிந்தவிஷயமே. அதிலுள்ள விசேடமான உருவமைப்பு,
தொழின்முறை அனைத்தையும், ஒருவாறாக நாம் கற்கவேண்
டியதுதான்.

இவை எல்லாம் தத்தமக்கு ஏற்பட்டகாரியங்களை யாந்தி
ரிக வொழுங்குடன் நடத்துமெனினும், இவற்றிற்கெல்லாம்
பலக்குறைவு வாராதபடிக்கு உணவு அளிப்பது யாது என வின
வுவோம். நீங்கள் பெரியோர் சிறியோர் அனைவரும் "வயிறும்
அவயவங்களும்" என்ற ஒரு கட்டுக் கதையை வாசித்திருப்பீர்
களே. ஆகையால் வயிற்றின் மகத்துவம் எல்லோருக்கும்
தெரிந்தவிஷயம். நாம் உட்கொள்ளும் உணவானது இரத்
தத்தில் வியாபிக்கவேண்டும். இரத்தம் போகும் இடங்களுக்
கெல்லாம் தானும் போகவேண்டும். அதுமாத்திரமோ? நமக்கு
வாயுவும் அவசியமன்றோ? ஒருநாள் முழுதும் பட்டினியாக
இருந்தாலும் இருக்கலாம். ஒரு கணப்பொழுதேனும் வாயு
(பிராணவாயு என்பார் இதனை) இல்லாமல் ஜீவித்திருக்க முடி
யாது. தேகத்தில் பலவிடங்களிலுமுள்ள பலவிதமான கழிவு
களை இரத்தம் கொண்டுசென்றால் அது தானே கெட்டுப்போய்
தேகத்தையும் கெடுக்கும். இதற்காகக் கடவுள் என்ன ஏற்

பாடு செய்திருக்கிறார் என்பீர் ஆகில், சுவாசம் என்பது இதற்காகவே ஏற்பட்டிருக்கிறது. சுவாசாசயத்திற்கு இரத்தம் ஓடி அங்கே சில கழிவுகளை நீக்கிப்பிராணவாயுவைச் சேகரித்துத் திரும்பும். வேறு கழிவுகளை எவ்வாறு நீக்குகிறது என்பதைத் தக்கவிடத்தில் சொல்லுவோம். இப்பொழுது கவனிக்கவேண்டியன பின்வருவனவே:—

i. ஆகாரம் பதன்பட்டு இரத்தத்தோடு ஒன்றுதல்வேண்டும். இது எப்படி ஆகின்றது?

ii. இரத்தசுத்தி எவ்வாறாகிறது?

iii. இரத்தத்தைத் தேகமுழுவதும் பரவும்படி செய்ய என்ன வேலைப்பாடு இருக்கிறது?

இம்மூன்று தொழில்களுக்கும் ஆதாரமாவனவே பிராணபீடமுக்காலி எனப் பெயர் பெறும்.

(இன்னும் வரும்.)

T. K. கோபால ராவ்.

நிலவழுக்குக ளென்பவை யாவை?

காடுகளையும், மலைகளும் குன்றுகளும்நிறைந்திருக்கும் நாடுகளையும், கடந்துபோவது கடுமையே. காடுகளிற் போவதெனின் எங்கு புலி வருகிறதோ, ஓநாய் வருகிறதோ, கரடி வருகிறதோ, மற்றுமுள்ள துஷ்டமிருகங்களினால் என்னவாபத்து நேரிடுமோ என்ற பயமே ஒருவனுக்கு அதிகரித்திருக்கும். இவற்றோடு நரிகள் ஊளையிடுவதையும் ஆந்தைகள் கிளை கூட்டலையும் அவன் கேட்பானாயின் மனம் திடுக்கிட்டு நிற்பானென்பதற்குச் சந்தேகமில்லை. இது இப்படியாக, மலைநாடுகளிற் பிரவேசிப்பதெனின், அதனிலும் கஷ்டம் முன்னிடாமற் போகவில்லை. ஒரு சார்பில் மலையும், அதைச்சேர்ந்தாற்போலொரு சிறிய குன்றும், மற்றோர் சார்பில் ஒரு பெருஞ்சுனையும், அச்சுனையையடுத்து ஒரு பெரும் புதரும், இன்னுமோர் சார்பில் ஆகாரமுண்டு இடத்தைவிட்டு நகரமுடியாமல் சரீரத்தினால் பெரும்பாறைகளைக் கட்டிக்கொண்டிருக்கும்

மலைப்பாம்புகளும், தப்பித்தவறி ஆடுமாடு முதலான கால்நடைகள் மேயவராவாவென்று ஒதுங்கிப் பதுங்கிச் சமயம் பார்த்து வந்தடிக்கும் சிவிங்கி, சிறுத்தைபோன்ற துஷ்டமிருகங்களும், வேறோர் புறத்தில் ஆகாயத்தை அளாவிநிற்கும் செங்குத்தான மலை யெழுச்சிகளும் இருப்பதைக்கண்டால் எவனும் எவ்வளவு அஞ்சாநெஞ்சு படைத்தோனாயினும் பயமுறுமலிருக்கமாட்டானென்பது திண்ணம். இப்பேர்ப்பட்ட மலைநாடுகளில் செங்குத்தான இரண்டுமலைகளுக் கிடையே இடைவெளியாயிருக்கும் கணவாய்களின் (Passes) வழியாகப் பிரயாணிகள் போவார்கள். மேலேசொன்ன அபாயங்களுக்குப் பிரயாணிகள் தப்பிக்கொள்வதுடன் வேறோர் பெரும்அபாயத்திற்கும் அவர்கள் தப்பிக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள். எப்போதும் மலைநாடுகளில் குளிரதிகம்; மலைச் சிகரமானது பூமியின் மட்டத்திற்கு நூற்றுக் கணக்கான அடி உயரத்திலிருப்பதனால் வானத்திலிருந்து மழைத்துளிகளாய் விழக்கூடிய நுண்ணிய நீர்த்திவலைகள் உஷ்ணமில்லாக் காரணம் பற்றி உறைபனியாகி மலைச் சிகரங்களிலேயே கட்டிதட்டி நின்றுவிடுகின்றன. குளிர்காற்றடிக்கும் ஒவ்வொரு நிமிஷத்திலும் நீர்த்திவலைகள் உறைபனியாக, நாளுக்கு நாள் மலையின் மேற்பாகமனைத்தும் வெண்ணிலாப் படர்ந்ததுபோல் பனிக்கட்டியினால் மூடப்படுகிறது. கஜக்கணக்காய்க் கற்பாறையின் மீது பனிக்கட்டிகள் நிற்கும்போது வாரத்திலொருநாள் சிறிது சூரியன் கண்திறந்து பார்க்கின், பனிக்கட்டி உருகவாரம்பமாகி மேற்சிகரத்தினின்றும் இடைவெளியிருக்குமிடங்களின் வழியாய் நீர் அருவியாயோடும். இத்தண்ணீர் ஓடிவரும்போது ஒருவன் அதை விரலினால் தொடுவானானால் அவன் விரல் மறத்துப் போகுமாறு நீர் அவ்வளவு குளிர்ந்திருக்கும்.

பின்னும் சிற்சில சமயங்களில் சூரியோஷ்ணம் அதிகரித்ததாகவாவது, வானங்கறுத்து அதிகமாய்ப் பனிபெய்யவாரம்பித்ததாகவாவது வைத்துக்கொள்வோம். அப்போது விழுந்தவிடத்தின்மீது வரிசைவரிசையாக உறைபனிபெய்யவும், மேற்சுமைதாங்கமாட்டாமல் பனிக்கட்டிகள் சிற்சில சமயங்களில் திரண்டு மத்தியிலகப்படுவனவற்றை உருண்டுபோகும்படியான வேகத்துடன் மேனின்று கீழ் வீழ்வதுண்டு; பின்னும் வரும் வழியில் கற்பாறைகளேதேனு மிருக்குமேயாமானால் அவைகளை

யும் அடித்துக்கொண்டுதான் வந்துசேரும். இம்மாதிரிவரும் பனியுறைகளைப் பூகோளசாஸ்திரிகளாயினர், பனிவழுக்குகள், என்பார்கள். இந்தப்பனி வழுக்குகள் மேலேசொன்ன காரணங்களேதேனும் ஒன்றைக்கடைப்பிடித்து கீழ்விழும்போதாவது, பனிக்கட்டிகளின் பாரம் தாங்கமாட்டாமல் மலைச்சிகரத்துள்ள பெருங்கற்பாறைகள் வழுக்குண்டு உருளும்போதாவது, இடைவழிகளின் வழியாகப் பிரயாணிகள் செல்வார்களானால் பிடித்தது சனியன் அவர்களுக்கு! தட்கட வென்று வரும் பனிவழுக்கு, நிலவழுக்கு இவையினுள் ஒன்றினாலேனும், அல்லது அவ்விரண்டினாலேனும் தாக்குண்டு அதிபாதாளத்திற்குப் போகவேண்டியவனுவதே அவன்கதியாய் முடிகிறது. இதற்கு அத்தாட்சியாய்ப் பற்பல உதாரணங்கள் எடுத்து விடைமெனினும் சின்னாட்களுக்கு முன் ஐரோப்பாகண்டத்தினுள்ள நார்வே தேசத்தில் நிலவழுக்குண்டானதாகச் செய்தி எட்டுவதே நிலவழுக்குகளினால் அபாயம்வருமென்பதைச் சுட்டிக்காட்டுகிறது. சாதாரணமாய் நதிக்கரையோரங்களிலும், கால்வாய்களின் ஓரங்களிலும் தண்ணீர் ஓடுங்காலத்து, தண்ணீரானது படுகைமண்ணோடுசேர்ந்து உண்டாவதன் கசிவினால் பாளம்பாளமாகக் கரை வெடித்து நிலையினின்றும் பிரிந்து தண்ணீருள் விழுவதைப்பார்த்தல் இயலும். இதைப் போலவே தான் குளக்கரையிலும் ஏரிக்கரையிலுமாம். அவ்வப்போது அவ்விடங்களில் விழாவிடினும், தண்ணீர் வெகுதினங்களாய் நிலத்திலூறியதன் காரணமாக மேலிருக்கும் நிலத்திற்குக் கீழஸ்திவாரம் பலனற்றுப்போகவும், அப்போது நிலத்துமேற்பாகம் பாரத்தினளவால் மத்தியிற் பிரிவுண்டு கீழ்விழ்வது வழக்கம். இதற்கும் நிலவழுக் கென்பார் பலர். நார்வேதேசத்தில் ஒரு ஏரியையடுத்துச் செங்குத்தானதோர் மலையிருக்க, அம்மலைச் சிகரத்தினின்றும் ஒரு பெருங்கற்பாறை பிரிந்து அடிவாரத்திலுள்ள ஏரியில் விழவும், அதன்பொருட்டு மைல் கணக்கான தூரத்திற்கப்பாலுள்ள கரையிலும் தண்ணீர் அலையினலெழும்பியதுபோற் காணப்பட்டதுடன் ஒருபெருஞ் சப்தமும் உண்டாயிற்றும். அஃதெப்படியாயினுமாகட்டும். நிலவழுக்குகளினால் நேரிடக்கூடிய அபாயங்கள் நிரம்பவுண்டென்பது இதை ஓதினோரனைவர்க்கும் நன்குவிளங்காமலிராது.

L. அனந்தய்யர்.

ஆரியர்களின் ஸங்கீத முறை.

(29-ம் பக்கத்தொடர்ச்சி.)

(குறிப்பு:—ஒரு மனிதன் சாதாரணமாய்ப் பேசும்போது அவனது முகம் பலவித நிலைகளில் நிற்கிறதல்லவா? அப்போது உச்சரிப்பதை ஷட்ஜம் என்று நாம் நினைத்துக்கொண்டால், அந்த மனிதனை தாரஸ்தாயி ஷட்ஜம் உச்சரிக்கும்படி செய்தால், அவன் முகம் கொஞ்சம் மேல் நோக்குவதை நாம் பார்க்கலாம். அதேமாதிரியாய், அம்மனிதனை மந்தரஸ்தாயி ஷட்ஜம் உச்சரிக்கும்படி செய்தால் அவன் முகம் கொஞ்சம் கீழ்நோக்குவதைக் கண்டுகொள்ளலாம்.)

ஸ்வரங்களில் வேபனங்கள் ஜாஸ்தியாவதினால் உச்சமாக விருக்குந்தன்மை ஏற்படுகிறது என்று சொன்னோமல்லவா? அதுமாத்திரமல்ல. வேறு இரண்டு காரணங்களாலும் முன் சொன்னமாதிரி ஸ்வரம் உச்சமாகும்.

ஒரு வீணை வாத்தியத்தை வாசிக்கும்போது கவனித்தால், ஸாரிணி (ஸாரணை என்னும் வலது கைவிரல்மட்டும் மீட்டுவதால் ஷட்ஜத்தைத் தரும் தந்தி)யை வலதுகை விரலால் மீட்ட ஸ என்னும் ஸ்வரத்தைத் தருகிறது. ரி என்னும் அதற்கு அடுத்த உச்சமான ஸ்வரத்தை வாசிக்கவேணுமானால், அந்த வாத்தியத்தில் ஏற்பட்டிருக்கும் க்ருஹம் (Fret) என்றும் வீடு என்றும் சொல்லப்பட்ட அடுத்த இடத்தில் இடதுகை விரலை வைத்துத் தந்தியை அமர்த்திக்கொண்டு வலதுகைவிரலால் மீட்ட, அந்த ஸ்வரத்தை நாம் கேட்கிறோம். இதிலிருந்து நாம் அறியவேண்டுவது யாதெனில்—ஒரு தந்தியின் நீளம் குறையக்குறைய அது தரும் ஸ்வரம் வரவர உச்சமாகும்.

மேலும், ஒரு தம்புரா வாத்தியத்தின் தந்தி சத்திக்கும் சத்தத்தை உச்சமாகச் செய்ய விரும்பினால், அதாவது, சுருதியை ஜாஸ்தி செய்ய வேணுமானால், அதன் பிரிடையை முடுக்குகிறார்களல்லவா? அதாவது, அதன் தந்தியை இழுக்கிறார்கள். அப்படி இழுப்பதினால் ஸ்வரம் உச்சமாய்விடுகிறது. ஒரு தந்தியை இழுத்தால்—நீளத்தைக் கொஞ்சம் குறைத்து இழுத்துக்கட்டினால்—அது தரும் ஸ்வரம் உச்சமாகிறது. முன் சொன்

னபோது தந்தி இழுக்கப்படவில்லை. இப்பொழுது இழுக்கப்படுவதனால் ஸ்வரம் உச்சமாய் மாறுகிறது. அதாவது, தந்தியை இழுத்தல் (Tension) ஸ்வரத்தை உச்சமாக மாற்றி விடும்.

மேலே சொல்லிய ஸ்வரங்களுக்கு ஸங்கீதசாஸ்திரங்களில் இட்டிருக்கும் பெயர்களாவன:—

ஷட்ஜம்—ஸ என்று ஸங்கேத முள்ளது.
ரிஷபம்—ரி ஷை
காந்தாரம்—க ஷை
மத்யமம்—ம ஷை
பஞ்சமம்—ப ஷை
தைவதம்—த ஷை
நிஷாதம்—நி ஷை

ஆகவே, ஸ என்பது முதல் ஸ' வரைக்கும் பன்னிரண்டு ஸ்வர ஸ்தானங்களிருக்கின்றனவென்று வீணைமுதலிய வாத்தியங்களைக்கொண்டும் காதினாலும் அறிந்துகொள்ளலாம். அந்தப் பன்னிரண்டு ஸ்தானங்களிலும் உள்ள ஸ்வரங்களுக்கு முறையே:



(சித்திரம்-1)

(1) ஸ—ஷட்ஜம்
(2) ரி$_1$—சுத்தரிஷபம்
(3) ரி—சதுச்சுருதிரிஷபம்
(4) க$_1$—ஸாதாரணகாந்தாரம்
(5) க—அந்தரகாந்தாரம்
(6) ம—சுத்தமத்யமம்
(7) ம$_2$—ப்ரதிமத்யமம்
(8) ப—பஞ்சமம்
(9) த$_1$—சுத்ததைவதம்
(10) த—சதுச்சுருதிதைவதம்
(11) நி$_1$—கைசிகிநிஷாதம்
(12) நி—காகலிநிஷாதம்.

3-வது, 4-வது, 10-வது, 11-வது வீடுகளில் உண்டாகும் ஸ்வரங்களுக்கு இரண்டு பெயர்கள் வழக்கத்திலிருக்கின்றன. (சித்திரம் பார்க்க) அவை முறையே:

க $_0$—சுத்தகாந்தாரம்
ரி $_2$—ஷட்சுருதிதைவதம்
நி $_0$—சுத்தநிஷாதம்
த $_2$—ஷட்சுருதிதைவதம்

என்ற இரண்டாம் பெயர்களைப் பெறுகின்றன.

இந்தப் பன்னிரண்டுஸ்வரங்களுக்கும் சாஸ்திரியமாக ஏற்படும் வேபனங்கள் பின்வருமாறு இருக்கின்றன.

*ஸ வுக்கு	120	வேபனமிருந்தால்,
ரி $_1$—க்கு	128	வேபனமாகிறது;
ரி—க்கு	135	௸
க $_1$—க்கு	144	௸
க—வுக்கு	150	௸
ம—வுக்கு	160	௸
ம $_2$—க்கு	169	௸
ப—வுக்கு	180	௸
த $_1$—க்கு	192	௸
த—வுக்கு	202	௸
நி $_1$—க்கு	216	௸
நி—க்கு	225	௸

இந்தப் பன்னிரண்டு ஸ்வரங்களையும் வைத்துக்கொண்டு கணக்கிட வல்லவர்களான ஸங்கீத வித்வான்கள் பிரஸ்தரித்து 72 மேள ராகங்கள் அல்லது மேளகர்த்தாக்கள் என்னும் ஸம்பூர்ண ராகங்களை ஏற்படுத்திவைத்திருக்கிறார்கள். மேலும் ஆதிகாலந்தொட்டு ஸம்ஸ்கிருத பாஷையே படிப்பவர்களது பொது பாஷையாயிருந்ததனால் இந்த ராகங்களுக்குப் பெயரிடும்போது ஸம்ஸ்கிருத அக்ஷரங்களான க, ட, ப, ய, முதலானவைகளை உபயோகப்படுத்திக்கொண்டு ராகங்களுடைய எண்ணிக்கை கூட அவைகள் வகிக்கும் பெயர்களாலேயே நமக்குப் புலப்படும்படியாக ராகங்களுக்குப் பெயரிட்டிருக்கி

* (இந்த ஸங்கேதங்களை நான் மகா-௱-௱-ஸ்ரீ ராவ்பகதூர் நாகோஜிராயர் அவர்களது புஸ்தகத்திலிருந்து இரவல் வாங்கியிருக்கிறேன்.)

றார்கள். உதாரணமாக—மாயாமாளவகௌளம் என்னும் ராகத்தின் பெயர் சொன்னவுடனே அதில் முதல் இரண்டக்ஷரங்களையும்கவனித்தால் மஎன்பது 5-ஐயும் யஎன்பது 1-ஐயும் குறிக்கிறது. ஆக, 15 என்னும் எண்ணிக்கையைக் குறிக்கும். அதாவது அது பதினைந்தாவது மேளராகமாம். அதே மாதிரி ராமப்ரியா, ஐம்பத்திரண்டாவது ராகமாம்.

இப்படி மேளராகங்களின் எண்ணிக்கை தெரிவதால் பிரயோஜனம் என்னவென்றால் இவ்விராகங்களின் எண்ணிக்கையை ஆறால் வகுத்து வரும் மிச்சத்தால், அவ்வவ்விராகத்தின் தைவத நிஷாதங்கள் இன்னமாதிரியென்று அறியக்கூடியது. ஈவைக்கவனித்தால் எத்தனையாவது ஆறில் அந்தராகம் இருக்கிறது என்று தெரியும். அது மூலமாய் ரிஷப காந்தாரங்கள் இன்னவையென்று அறியலாம்.

ஸ, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழுஸ்வரங்களையும் மேல் ஷட்ஜம் அதாவது ஸ' வோடு சேர்த்து எட்டுஸ்வரங்களாகவே சாஸ்திரத்தில் சில ஸௌகரியங்களுக்காகப் பாடுவது வழக்கமாயிருக்கிறது. (இதற்குக் காரணம் இன்னதென்பது தாளத்தைப்பற்றிய விஷயங்களை எழுதும்போது விவரித்து எழுதப்படும்.) ஆகவே, ஸ ரி க ம ப த நி ஸ' என்பதோடு அந்த ஸ்வரங்களைத் திருப்பி நாம் வாசித்தோமானால் ஸ' நி த ப ம க ரி ஸ என்னும் கிரமத்தைத்தருகிறது. முதலில் சொல்லப்பட்டதற்கு ஆரோஹண வரிசையென்றும், இரண்டாவதாகச் சொல்லப்பட்டதற்கு அவரோஹண வரிசையென்றும் பெயரிடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு வரிசைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு மேளம் என்று சொல்லுகிறார்கள்.

ஸ முதல் ஸ' வரைக்கும்பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களும், ஆனால் பதினாறு நாமங்களும் அமைந்திருக்கின்றன. (படம் 1—பார்க்க.)

அந்த ஸ்வரங்களில் ஸ முதல் ம வரைக்கும்: ஸ, ரி க ம என்ற நாமமுள்ள ஸ்வரகணம் எத்தனை வரும் என்று நாம் கணக்கிட்டுப்பார்த்தால்:

(1) ஸ ரி$_1$ க$_0$ ம
(2) ஸ ரி$_1$ க$_1$ ம
(3) ஸ ரி$_1$ க மு—என

காந்தாரத்தில் மட்டும் பேதமுள்ள மூன்று பேதங்கள் ஏற்படுகின்றன. இதையே பிரஸ்தாரம் (Combination according to Laws of Permutation in Algebra) என்பார்.

பிறகு அதேமாதிரி,

ஸ ரி $க_1$ ம

ஸ ரி க ம—என

இரண்டு பேதங்களே உண்டாகின்றன. ஏனெனில், சதுச்சுருதிரிஷபமும் சுத்த காந்தாரமும் அதே ஸ்தானமானபடியால் பிரஸ்தாரம் செய்யும்போது இரண்டும் வரமாட்டாது. ஆகவே, காந்தாரத்தில் இரண்டே பேதமுண்டாகும். அதாவது சதுச்சுருதிரிஷபமுள்ள மேளங்கள் இரண்டு தான் ஏற்படும்.

இதே பிரகாரமாய்;

ஸ $ரி_2$ க ம என்று

ஒரே பேதமுள்ள மேளமே அடுத்ததாக வரும் என்று அறிந்துகொள்ளலாம். ஷட்சுருதிரிஷபமே ஸாதாரண காந்தார ஸ்தானமாதலால், அந்த காந்தாரம் பிரஸ்தாரம் செய்யும்போது வரமாட்டாது. அந்த காந்தாரமே வராதபோது அதற்கு முந்தின ஸ்தானமான சுத்த காந்தாரமும் வர இடமில்லாமல் போகிறது.

ஆகவே, ஸ ரி க ம எனப் பெயருள்ள நாலு பூர்வஸ்வரங்களுள்ள கணங்கள் (Lower Tetrachords) ஆறு உண்டாகின்றன என்று கணக்கிட்டே அறிந்துகொள்ளலாம்.

(இன்னும் வரும்)

P. S. ஸு ந்தரமய்யர், B. A. L. T.

‘சாக்’ அல்லது சீமைச் சுண்ணம்பு.

(௩அ-ம் பக்கத்தொடர்ச்சி.)

இதுவுமன்றிப் பூமியின் உட்புறத்தில் உஷ்ணம் அதிகப்படுவதுபோல் சிலசமயத்தில் குன்றுவதும் உண்டு. அதனால் பூமியின் மேற்பரப்பு உள்ளே சுருங்குகின்றது. ஆனதுபற்றி

மேற்கூறிய காரணங்களைக்கொண்டு பூமியில் மேடுபள்ளங்கள் ஏற்படுகின்றன. ஏற்படவே மழை, வெயில், காற்று, இவற்றின் செயலால் முற்கூறிய விதமாகப் பூமியின் மேலோட்டில் தாதுக்கள் அடுக்கடுக்காக அமைகின்றன.

இவ்விதமாகத் தாதுக்களின் ரீதியை ஒருவாறு அறிந்து நாம் இங்குவிசாரிக்கப்புகுந்த தாதுவாகிய சாக்கைப்பற்றிச் சற்று கவனிப்போம். சாக்கின் தன்மையைப்பற்றி ஸாதாரணமாய் நாம் என்ன என்ன விஷயங்களை அறிகிறோம்? சாக் என்பது எது எது சேர்ந்து உண்டாகியது? சாக்குக்குச் சீமைசுண்ணும்பு என்று பெயர் வழங்கக்காரணம் யாது? இவ்வினுக்களுக்கு விடைபகர எத்தனிப்போம்.

ஒரு சாக்கட்டியை நெருப்பில்போட்டு நன்றாய்ச் சுட்டுப் பார்ப்போம். அதனால் அதில் உண்டாகும் மாறுபாடு என்ன? ஸாதாரணமான சாக்கட்டி ஒன்றையும் மேற்சொல்லிய விதம் சுட்ட சாக்கட்டி ஒன்றையும் இரண்டு தட்டுகளில் தனித் தனியே எடுத்து இரண்டின் பேரிலும் கொஞ்சம் தண்ணீர் வார்ப்போம். முதற்கட்டியில் ஊற்றிய ஜலம் அக்கட்டியிற் சுவர்ந்து சும்மா நிற்க, இரண்டாவது கட்டியில் ஊற்றிய ஜலம் ஹிஸ்ஸெனும் சத்தத்துடன் கொதிக்க ஆரம்பிக்கின்றது. அப்போது அக்கட்டி அலர்ந்து அதனின்று நீராவி எழுகின்றது. அதை வைத்திருக்கும் தட்டும் சுடுகின்றது. கொஞ்சம் கவனித்து நோக்குங்கால் சுட்ட சாக் சுண்ணும்பாகிவிட்டதெனத் தெரிகின்றது. ஆகையால் சாக் சுட்ட பிறகுதான் சுண்ணும்பு ஆகிறபடியால் அது சுண்ணும்பினின்று பேதித்து நிற்கிறதெனவும் அதில் சுண்ணும்பைத்தவிர வேறு ஏதோ இருந்து அதைச்சுட்டபிறகு ஓடிப்போய்விட்டதெனவும் நாம் ஊஹிக்கலாம்.

அப்படியாயின் அந்த வேறொன்று என்ன?

கொஞ்சம் சாக்கைப் பொடி செய்து ஒரு சீசாவில்போட்டு அந்த சீசாவிற்கு இடும் கார்க்கின் வழியாய் ஒரு பொனல் குழாயையும், '⌐¬' வைப்போல் வளைந்த மற்றொரு குழாயையும் செலுத்தி, அந்தப் பொனல் குழாயின் அடிப்புறம் அநேகமாய்ச் சீசாவின் அடிப்பாகத்தை நெருங்கும்படி செய்வோம். பிறகு பொனல் குழாயின் வழியாய்க் கொஞ்சம் 'வினிகர்' என்

னும் காடியை ஊற்றுவோம். ஊற்றியவுடன் சீசாவிற்குள்ளிருக்கும் சாக்கின்பொடி நுரைக்க ஆரம்பிக்கவே ஒருவித வாயு அதனின்று எழும்பி வெளியே வருகின்றது. இந்தக் காற்றை வேறு சில சீசாக்களில் ஜாக்கிறதையாய்ப் பிடித்து வைத்துக்கொண்டு அவற்றிலொன்றை எடுத்து அதற்குள் எரிந்துகொண்டிருக்கும் ஒரு வத்தியை இடும்பக்ஷத்தில் சட்டென வத்தி அணைந்துவிடும். இவ்விதக்காற்று ரசாயன சாஸ்திரிகள் அபிப்பிராயப்படி 'கார்பானிக் ஆஸிட் காஸ்' என்னும் கரிஅமில வாயுவாயிருக்கலாம், அல்லது 'நைட்ரோஜன்' என்னும் உப்புவாயுவாயுமிருக்கலாம். ஆனால் இவ்விரண்டில் அக்காற்று இன்னதென எப்படி அறியலாம்?

சுண்ணாம்பு நீர்த்தெளிவைக் கொஞ்சம் எடுத்துக்கொண்டு தயாராக வைத்திருக்கும் அக்காற்றடங்கிய சீசா ஒன்றில் ஊற்றிக் குலுக்கும் பக்ஷத்தில் அத்தெளிவு குப்பென வெளுக்கும். இவ்விதம் வெளுக்கச்செய்யும் அக்காற்றையே கரிஅமிலவாயு என்பார்கள். நல்லது; சுண்ணாம்பு நீர்த்தெளிவு கரிஅமிலவாயுவுடன் கூடவும் குப்பென வெளுப்பானேன்? அத்தெளிவிலுள்ள சுண்ணாம்பு அக்காற்றுடன் கூடிச் சாக் உண்டாகச் செய்வதாலும் சாக் வெளுப்பாயும் தண்ணீரில் கரையாமலும் இருக்கிற பதார்த்தமானபடியாலுந்தான் தெளிவு வெளுக்கின்றது. ஆகவே மேற்கூறிய ஆதாரங்களைக்கொண்டு சாக் என்பது சுண்ணாம்பும் கரி அமிலவாயுவும் சேர்ந்து உண்டாகிய பதார்த்தமென ஏற்படுகின்றது. ஆனால் உலகத்தில் பலவிடங்களில் மலை மலையாயும் அநேக மயில் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தை அடைந்துகொண்டுமிருக்கிற இத்தாது இவ்வுலகைப்படைத்தவனால் சுண்ணாம்பு நீர்த்தெளிவையும் கரி அமிலவாயுவையும் கூட்டியா சிருஷ்டிக்கப்பட்டது? இல்லாவிடின் இது உண்டான முறை எப்படி? இக்கேள்விகளுக்கு முகாந்தரம் உரைப்பது வெகு கஷ்டமாய்த்தோன்றிய போதிலும் தாதுவர்க்க சாஸ்திரப் பயிற்சியைக்கொண்டு ஒருவன் ஒருவாறு வெகு எளிதில் பிறருக்குப் புலப்படும்படி செய்யலாம்.

(இன்னும் வரும்)

T. R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், B. A.

பூகம்பமும் எரிமலையும்.

(36-ம் பக்கத் தொடர்ச்சி.)

பாதி உருகிய கற்குழம்பு அக்கினிமலையின் குழாய் வழியாக மேலே கிளம்பி அம்மலையின் நாலாபக்கங்களிலும் வழிந்து ஓடினாலுமோடலாம்; அல்லது அம்மலையினிடத்துள்ள வெடிப்புக்களின் வழியாய்ப் புகுந்து உருகிய வெல்லப்பாகின் தன்மையை யடைந்து வெளியேறி ஓர் உஷ்ணமான சிற்றாறாகப் பாய்ந்தோடினாலுமோடும். இம்மாதிரியான அக்கினிமலை ஆறுகளின் பரிமாணம் அளவிடக்கூடியவைகளல்ல, மிகப்பெரிய பரிமாண அளவுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. ஆயினும் 1783௵த்தில் ஐஸ்லாண்டில் (Iceland) உள்ள ஸ்காப்டர் ஜோக்கல் (Scaptar jokul) என்னும் எரிமலைகற்குழம்பைக் கக்கியதில், ஆல்ப்ஸ் (Alps) மலையின் உன்னத முடியாகிய மௌண்ட் பிளாங்கின் (Mount Blanc) பரிமாணத்திற்குச் சரியான கற்குழம்பு பூமியின் உட்பிரதேசத்தினின்று அம்மலையின் க்ரேடர் வழியாக வெளிவந்ததென்று பெரியோர்கள் கணக்கிட்டறிந்திருக்கிறார்கள். வெளியே நாலாபக்கங்களிலும் பரவிய கற்குழம்பின் மேற்பாகம் சீக்கிரத்தில் குளிர்ச்சியடைந்து இறுகிக்கெட்டியாகிறது. உட்புறமோ வெகுகாலம் உஷ்ணத்தை விடாது வகித்துக்கொண்டிருக்கிறது. கடைசியாக, அவைகளெல்லாம் ஒரு பெரிய இரும்படுப்பினின்று முண்டாகிய களிம்புபோன்ற ஒரு பெரிய கிட்டம் பாறையாகத் தோய்ந்து விடுகிறது. மலைக்கிட்டங்கள் பலபல விடங்களில் பற்பல விதமாகக் காணப்படுகின்றன. அவைகள் சில விடங்களில் கருநிறத்தோடு பளுவாயிருக்கின்றன! வேறு சில விடங்களில் மங்கிய நிறத்துடனும் குறைந்த பளுவுடனும் காணப்படுகின்றன. இன்னும் வேறு சில விடங்களில் கடற்பஞ்சு அல்லது உருகிய உருக்காங்கல் போன்று அகப்படுகின்றன. உருக்காங்கல் போன்ற மலைக்கிட்டங்களுக்கு ஆங்கிலேய பாஷையில் ஸ்கோரியா (Scoria) என்று பெயர். அவைகளிலுள்ள சிறிய துவாரங்களெப்படி யுண்டானவையெனில், அது பின்வரும் திருஷ்டாந்தத்தால் நன்கு விளங்கும். இதற்கு உதாரணமாக ரொட்டிசெய்கிற கிடங்குகளில் உள்ளவர்கள்

ரொட்டிமாவுடன் ஈஸ்து (yeast) என்னும் ஓர் வஸ்துவைச் சேர்க்கிறார்கள். அதைச்சேர்ப்பதால், அம்மாவு புளிப்பு மிகுந்து, பொங்கி, காற்றைத் தன் வசப்படுத்தி இழுத்துக் கொள்ளுகிறது. அடுப்பில் வைத்துச் சுட்டவுடன் அம்மாவுடன் சேர்ந்திருந்த ஈஸ்துவும் வாயுவும் அடுப்பின் உஷ்ணத்தினால் வெளியேற அவைகளிருந்த இடங்களெல்லாம் சிறிய துவாரமுடையவைகளாகின்றன. ரொட்டியை வாங்கிப் பிட்டுப்பார்த்தால் அது நன்கு விளங்கும். இதேமாதிரி அக்கினி மலையினின்றும் வெளியேறிய கற்குழம்புடன் கலந்த காற்றும் ஆவியும், அக்கற்குழம்பு இறுகிய காலத்து வெளியேறியபடியால், அவைகளிருந்த இடங்கள் சிறிய துவாரங்களாக இருக்கின்றன. ஆங்கிலேய பாஷையில் ப்யூமிஸ் (Pumice) என்னும் பெயருடைய வர்ணத்தேய்ப்பான் கல்லும் இவ்வினத்தைச் சேர்ந்ததே. அப்பதத்திற்கு 'கிட்டான் நுரை' என்று பொருள். அதன் பெயரே அதை நன்கு விளக்குகின்றது. அக்கினிமலைக் கற்குழம்பு, ஆகாயத்தில் வீசிவிடப்பட்ட பொழுது, காற்றால் சிதறுண்டு கீழே விழுகையில், அத்தூள்கள் சுழல்வதால் உருண்டைவடிவை யடைகின்றன. அப்படி உருண்டை வடிவமடைந்த கிட்டான்களுக்கு எரிமலை வெடிகுண்டென்று பெயர். அபூர்வமாகச் சில சமயங்களில் எரிமலையினின்றும் வெளியேறிய நீர்த்தன்மை பொருந்திய கற்குழம்பு காற்றால் மோதப்பட்டு சிலந்திநூல் போன்ற நுண்ணிய கம்பிகளாகப் பிரிக்கப்படினும் படும். சாண்டுவிச் (Sandwich) தீவுகளில் ஒன்றாகிய ஹாவே (Hawaii) யிலுள்ள கிலேயு (Kilauea) என்னும் எரிமலையில் மேற்சொன்ன காக்ஷியை எவரும் பார்க்கலாம். அவ்விடத்தில் அதற்கு பேல்லி மயிர் (Pelle's hair) என்று பெயர். (பேல் என்பாள் எரிமலையின் அதிஷ்டானதேவி.) ஆதலால், அத்தீவில் வசிப்பவர்கள், மெல்லிய கம்பிபோன்ற நுண்ணிய மலைக்கிட்டான்களுக்கு அப்பெயர் கொடுத்தார்கள் போலும். வேறு சில கிட்டான்கள் கண்ணாடிபோன்ற தன்மையைக் கொண்டவைகளாக இருக்கின்றன. அவைகளின் நிறம் கருத்த சீசாவின் கண்ணாடி நிறத்தை ஒத்திருக்கிறது. அத்தன்மைபொருந்திய மலைக்கிட்டான்களுக்கு ஆப்ஸிடியன் (Obsidian) என்று பெயர். இவ்விதக்கிட்டான்களினால் அமெரிக்காகண்டத்தின் ஒரு நாடாகிய

மெக்ஸிகோவில் வசித்த பூர்வகாலத்து ஜனங்கள் கத்தி, வாள், முதலிய ஆயுதங்களைச் செய்தார்கள். அவர்கள் மேற்சொன்ன ஆயுதங்களாக வெட்டியெடுத்த குன்றுக்கு "கத்திக்குன்று" என்று பெயர். அம்மலை இப்பொழுதும் மெக்ஸிகோவின் வடபாகத்திலிருக்கிறது.

(இன்னும்வரும்)

K. இராமநுஜ ஐயங்கார்,

உ

முருகன் றுணை.

செய்யுள் (௰உ).

துறை—செந்துறைப் பாடாண்பாட்டு.

வண்ணம்—ஒழுகுவண்ணம்.

தூக்கு—செந்தூக்கு.

இவற்றின்பொருளை (௰க) ம் செய்யுள் உரையிற்காண்க.

பெயர்—மறம்வீங்குபல் புகழ்—அரசர்க்குச் சிறந்தமறப் புகழ் மற்றைப்புகழினும் மிக்கபல்புகழ் என்ற சிறப்பானே இதற்கு இப்பெயர் ஆயிற்று.

1—3. வயவர்—வேந்தே:—படை வீரர் வீழ வாளான் மயக்கி, அளவற்ற சுற்றத்தார்களோடு கூடிய அரசு தலை கடுங்க கடம்பினடியைத் தடிந்த, மிக்க கோபமுள்ள, அரசே!

4—9. தாரணி—செல்வம்:—தாரையணிந்த எருத்தத்தையும் வார்த்தாற்போன்ற கூரிய நகத்தையுமுடைய சிங்கம் உலாவுகின்ற மலைப் பக்கங்களில், வேறுவிலங்குகளின் றொகுதியைக் கொண்ட ஒழுங்கான கூட்டம் மனம் நடுங்குவதுபோல, முரசொலிக்கின்ற பெரிய நகரங்களிலுள்ள அரசர்கள் துயிலாமல், எட்டுத்திக்கும் நடுங்குதற்குக்காரணமான, வீரமிகுந்த நின் செல்வத்தின் பல்புகழ்கேட்டற்கினிது,

9—14. கேட்டொறும்—ஒக்கல்:—அச்செல்வத்தைக்கேட்டொறும் பார்க்கும் விருப்பத்தோடு, (பரிமளிக்கின்ற மலை மல்லிகையையும், இளைப வாடாத பசியமயிரையும் ஆடும் நடையையுமுடைய பெருமைபொருந்திய மழகளிறு, அரிஞிமிறு, பாதுகாக்கின்ற கன்று பிரியாதபிடி, இவைகளையுமுடைய) பல மலைகளைத் தாண்டிவந்து அவ்விடத்துத் தங்கிய பெரிய சுற்றத்தார்,

15—18. தோல்பசி—மாந்தி:— நெடுநாளாய்ப் பசியால் வருந்திய துன்பம் நீங்க, வாள்பிளந்தறுத்த வெள்ளிய கொழுப்பின் செழியதுண்டையும், ஆட்டிறைச்சியைப் பெய்தட்ட வெண்ணெல்லின் வெண்சோற்றையும், தேனாலமைத்த கள்ளின் றெளிவோடுண்டு,

19—21. நீர்ப்படு—கோளீஇ:—நீரிற்படிந்த பருந்தின்கரிய சிறகு போன்ற, மண்ணரித்த கிழிந்த சீரையை நீக்கிப்பிறகு, மனிதர்நூலா நூலாகிய பட்டுநூல் முதலிய வற்றாற்செய்த துணியையிடையிற்றரித்து,

22—23. வணரிரும்—அணிய:—வளைந்த பெரிய கூந்தலையும், வளைந்த மூங்கிலையொத்த மெல்லிய தோளையுமுடைய குற்றமற்ற மகளிர் விளங்கணியணிய,

24—25. அமர்பு—மகிழ்வே:—உண்மையாகப் பொருந்திய சுற்றமொடு கூடிய, உன்னுடைய பெரிய ஆரவாரத்தையுடைய ஒலக்கத்துச் செல்கின்ற விநோதமகிழ்ச்சி அனுபவித்தற்கினிது.

(48-ம் பக்கம், 17-ம் வரியில், 'வானை' என்பதை 'வாளை' என்றும், 21-ம் வரியில், 'உலர்ந்தாங்கு' என்பதை 'ஊர்ந்தாங்கு' என்றும், திருத்துக.)

(இன்னும் வரும்)

பண்டிதர். **K. M.** நடேச ஐயர்.

எனெயிட்.

(24-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறு மொழிந்து ஏயோலியஸ் என்பவர் தன் வேலாயுதத்தைச் சுழற்றி மலைகளின் பக்கம் தாக்கவே, காற்றெல்லாம் அணிவகுத்தாற்போல் ஒருங்கு திரண்டு பற்பல மார்க்கமாய் வெளிப்பட்டுப் பூமியின்மேல் யுத்தவீரர்போல் போர்புரிய ஆரம்பித்தன. இக்காற்றுகள் சமுத்திரத்தைத் தாக்கவே, கர்ப்பங் கலங்கி உழவுண்ட நிலம்போல் அடிமேலாகி சமுத்திரத்திலிருந்து பிரமாண்ட அலைகள் கரையின்மேல் மோதவும் கப்பலின் கயிறுகள் அறுபட்ட சப்தமும் ஜனங்களின் கூக்குரலுமே கடலிரைச்சலுக்கு மேலிட்டன. ஒரு க்ஷணத்திற்குள் மேகங்கள் ஆகாயத்திற் சூழ்ந்து சூரியனை மறைத்து விழுங்கவே, அந்தகாரமே சமுத்திரத்திற்கு ஓர் கரிய கவசாயமாயிற்று. தெற்கும் வடக்கும் ஒருங்கு சேர இடிமுழக்கம் முழங்கியதையும் இடைவிடாது மின்னல்கள் மின்னினதையும் நோக்குங்கால், பிரபஞ்சமே ஒன்று கூடி ட்ராயினர்களை க்ஷணத்திற் கொலைபுரியக் குரூரவேடம் பூண்டாற்போல் காணப்பட்டது.

அத்தருணம் திடுக்கிட்ட எனயாஸ் என்பவர் பய மிகுதியால் உடம்பு சிலிர்த்து, அஞ்சலியஸ்தராய் வானத்தை நோக்கிப் புலம்புகிறதாவது:—

தங்கள் தங்கள் பிதிர்கள் கண்முன்பாகவே ட்ராய் தேசத்திலேயே யுத்த களத்தில் இறந்தார்களே, அவர்கள் பாக்கியமே பாக்கியம்! கிரீக் வீரசிகாமணியாகிய டயாமிடஸ் பிரபுவே! ட்ராய் யுத்தத்தில் உன்கையால் மாளும்படியான சுகிர்தம் எனக்குக் கிடைக்காமற்போயிற்றே! சாமர்த்தியமாய் வெகுகாலம் ஜயமாகச் சண்டையை நீட்டுவித்த ஹெக்டர் என்கிற வீரரும் அக்கில்லஸ் என்பவருடைய ஆயுதத்திற்கு இரையானரே! ஸார்பிடன் என்பவருக்குங் காலம் வந்ததே! சிமோயிஸ் நதியில் ஆயுதபாணியாய் இப்போரில் எத்தனையோ வீரர்கள் மாண்டார்களே! அவர்களுடைய பிராப்தம் எனக்குக் கிடைத்திருக்கலாகாதா?

இவ்வண்ணம் வருந்துங்கால், வடக்கிருந்து ஆரவாரித்து வந்த ஓர் புயலானது கப்பல்களைத் தாக்கவும் அப்போது எழும்பிய அலைகள் நக்ஷத்திர மண்டலத்தை அளாவியன. கப்பல்களின் தண்டுகள் முறிபடவே, கப்பல்கள் பக்கம் மாறி அலை மோதுதலுக்குள்ளாயின. குவியல் குவியலாகச் செங்குத்து மலைகள்போன்ற ஜலத்திரள்கள் தொங்குகின்றன போல், அலைகள் ஆகாசம் அளாவும்படி யெழுந்தன. சமுத்திரம் அகல்வாய் திறத்தலால், அலைநடுவில் பூமி ஸ்பஷ்டமாய்த் தோன்ற, சுழியலைகள் மண்ணுடன் மிசிரித்துச் சுழன்றன. தெற்கிருந்து ஒருபுயல் அடித்து, சமுத்திரத்திற்குள் நீர் மட்டம் வரையில் எழும்பிக் கண்ணுக்குத் தோன்றாமல் மறைபட்டுக் கிடந்த அகன்ற பாறைகளின்மேல் மூன்று கப்பல்களை மோதியது. கிழக்கிருந்து அடித்த ஒரு புயலாலே வேறு மூன்று கப்பல்கள் மேடேறி மண்ணிற்புதைபட்டுத் தத்தளிப்பதைக் கண்படைத்தவர்கள் பார்க்கச்சகியார்கள்! இப்பரிதாபத்தை **எனயாஸ்** பார்த்துக்கொண்டிருக்கையில், மலை விழுந்தாற்போல் ஓர் பிரமாண்ட அலை அவருடன் துணைகளாக விசுவாசத்துடன் வந்தவர்களுடைய ஓர் கப்பலை மோதவும், அதன் மாலுமி கரணம் போட்டவன்போலத் தலைகீழாகச் சமுத்திரத்தில் அமிழ, அந்தக்கப்பல் மூன்றுதரம் சுழன்று சமுத்திரத்திற்குப் பலியாயிற்று. சமுத்திரத்தில் கண்நோக்கின தூரம் **ட்ராயி**னோர்களின் பிரேதக்குவியல்களும் இவர்களின் ஆயுதம் முதலியனவும் தவிர வேறொன்றுங் காணப்படவில்லை. பார்த்தவிடமெங்கும் **ட்ராயினர்** கப்பல்கள் சின்னபின்னமாய் உடைபட்டு ஜலம் நிரம்பிக் கீழ் அமிழ்ந்து கிடந்தன.

இதற்குள் சமுத்திரராஜனாகிய **நேப்டியூன்** கடல் ஆரவாரித்துக் கலக்கமுற்றுப் புயலினால் மோதுண்டு கீழ் மேலாகப் புரண்டு கிடப்பதை அறிந்தவளவில், தன்னையறியாமல் எவ்வளவோ படபடப்பு வந்தும் உள்வழிப்பார்வையாலும் குளிர்ந்த ஆலோசனையினாலும் கோபாக்கினி மூளாவண்ணந்தடுத்து, அமர்ந்தவதனம் பூண்டனாய் **எனயாஸ்** என்பவரின் கப்பல்கள் சின்னபின்னமாய்ச் சிதைபட்டுக் கிடப்பதையும் **ட்ராயி**னர்கள் அலையால் அடிபட்டுப் பரிதவிப்பதையும் போதும் போதாததற்கு வானமும் ஒன்று கூடிக் கடுமைபுரிவதையும் கண்ணுற்றுப்பார்த்தார். கொடிய **சூனோ** என்பவள் புரிந்த

வஞ்சமுங்களவும் அவள் சகோதரனாகிய இச்சாந்தமூர்த்தியாகும் சமுத்திரராஜனுக்கு ஸ்பஷ்டமாய்த்தோன்றியிருந்ததன்று. உடனே காற்றுக்களை வரவழைத்துப் பின்வருமாறு ஆக்ஞாபித்தார்:—குலத்துக்கேற்ற புத்தியென்பதுபோல், உங்கள் வன்மையை நம்மிடமா காட்டுகிறீர்கள்? என் ஆக்கினையின்றி வானமும் வையமும் ஒன்றாகும் வண்ணம் கலக்கம் புரியவும், மலைகளே யன்ன அலைகளையெழுப்பவும், உங்களுக்குத் தைரியம் பிறந்ததல்லவா? என்னுடைய வல்லமை எவ்வளவு என்பதைக்காட்டவும் வேணுமா? ஆகிலும், கோபக்கடலின் சிறிய அலைகளை அடக்கியாளுதலே முதற்றருமமன்றோ? இந்த நடத்தை இனி உங்களிடம் காணப்படுமானால், அப்போது உங்களுக்கு விதிக்கப்படும் தண்டனை வேறாகும்! ஆகிலும், இந்தக்ஷணமே உங்கள் இருப்பிடஞ் சேர்ந்து உங்கள் ராஜனுக்கு என் உத்தரவைத் தெரிவிக்க வேண்டியதாவது,— அகன்ற இச்சமுத்திர ராஜ்ஜியமும் கண்டவர்களுக்கு அச்சம்புரியும் திரிசூலமும் நமக்குக் கிடைத்ததேயொழிய உங்கள் ராஜனுக்குக் கிடைத்ததல்ல. அவருக்குக் கிடைத்த ராஜ்ஜியம் உங்கள் வாசஸ்தலமாகிய கனத்தமலைகளே! அந்த ராஜ்ஜியத்தில் அவர் வேண்டுமாறு கம்பீரமாய் ராஜரீகஞ் செலுத்தி, உங்களிடத்தில் இஷ்டப்படி ஆக்கினைபுரியட்டும்.

(இன்னும்வரும்.)

A. சிவக்கொழுந்து முதலியார், B. A.

தமிழ் நூல்களும் நூலாசிரியர்களும்.

2. சூடாமணி நிகண்டின் காலவரையறை.

மண்டல புருஷன் என்னும் சைனாசிரியரால் செய்யப்பட்ட இச்சூடாமணி நிகண்டு திவாகரம் பிங்கலந்தை என்னும் மற்றிரண்டு நிகண்டுகளுக்கும் பிந்தியது. பின்வருகிற இந்நிகண்டின் சிறப்புப்பாயிரத்து இரண்டாம் செய்யுளை நோக்குக:—

"அங்கதுபோயபின்றை யலகினால் பிறந்த மற்றுஞ்
செங்கதிர் வரத்திற்றோன்றுந் திவாகரர் சிறப்பின் மிக்க
பிங்கலருரை நூற்பாவிற் பேணினர் செய்தார்சேர
விங்கிவையிரண்டுங்கற்க வெளிதலவென்றுசூழ்ந்து."

இவ்வாசிரியர் சைனபுராணமாகிய உத்தரபுராணத்தைச் செய்த குணபத்திராசாரியர் என்னும் சைனமுனிவருடைய சிடர் என்றும், இவர் இந்நிகண்டை இயற்றியது தமது ஆசிரியர் மேற்படி புராணத்தைச் செய்து முடித்த பின்னரே என்றும் நன்கு விளங்குகிறது:—

"சொல்லொடு பொருளுணர்ந்தோன் சோதிடநீதிவல்லோ
னல்லறிவாளனெங்க ணாறுங் குன்றை ஞானமூர்த்தி
பல்லுயிர்க்கொருதாயாகும் பரமன் மாமுனிவன் மெய்ந்நூல்
வல்லுநர் வல்லார்க்கெல்லாம் வரையறத்தரையில் வந்து,

"பரிதியொன்று தயஞ்செய்து பங்கயமநேககோடி
முருகெழமலர்வித்தென்ன முகமுடனக மலர்த்தி
மருவுமுத்தமிழைமுன்னாள் வளர்த்த பாண்டியனே போலக்
கருதிய வெல்லாந்தந்து கவிமணிமாலைசூடி,

"செகமெனும்பளிங்குமாடத் திகிரிவேந்தரையே போலப்
புகழெனும் பஞ்சுசேர்த்திப் பொலிவுறு பேரத்தாணி
மகிழ்குணபத்ரனெங்கள் வழித்தெய்வம்போல்வான் சொல்ல.
விகபரமிரண்டும்வேண்டி யியலிசைவல்லோர் கேட்ப,

"விரவியதேவர்மக்கள் விலங்கொடுமரமிடம்பல்
பொருள்செயும்வடிவுபண்பு போற்றியசெயலொலிப்பே
ரொருசொற்பல்பொருளினோடுரைத்தபல்பெயர்கூட்டந்தான்
வருமுறை திவாகரம் போல்வைத்துப் பிங்கலந்தை தன்னில்,

"ஒருங்குளபொருளுமோர்ந்திட்டுரைத்தனன் விருத்தந்தன்னி
லிருந்தவைகல்லோர்குற்ற மியப்பிடா ரென்பதெண்ணித்
திருந்திய கமலவூர்தி திருப்புகழ் புராணஞ்செய்தோன்
பரந்த சீர்க்குணபத்ரன்றாள் பணிந்தமண்டலவன்றானே."

(சூடாமணி நிகண்டு, சிறப்புப்பாயிரம் செய்யுள் 4—8.)

"இறந்தது நிகழ்வுமற்றை எதிர்வுமாம்புராணஞ்செய்தோ
னறந்தருகுணபத்ரன்றா ளரணைச்சரணமானோன்
மறந்தலைப்படாதவீரை மன்னன்மண்டலவன் செய்தான்
சிறந்திடுமொலியற்றும்பேர் செய்யுளொன்றைந்திரட்டி."

(மேற்படி நிகண்டு, ஒலிப்பற்றிய பெயர்த்தொகுதி 50-வது செய்யுள்).

புராணஞ்செய்த குணபத்திர முனிவர் இன்னார் என்பதும், அவர் எக்காலத்தில் அப்புராணத்தைச் செய்து முடித்தார் என்பதும் அவரால் இயற்றப்பட்ட அந்தப்புராணத்தின் இறுதியில் அவரே சொல்ல வெளியாகிறது. அந்தப்புராணத்தின் இறுதியிலுள்ள சுலோகங்களின் கருத்து:—

"வனவாஸி என்னும் நாட்டில் வங்காபுரத்தில் அகாலவருஷன் என்னும் அரசன் ஆண்டு வருகையில், சகாப்தம் 820 (கி. பி. 898)க்குச் சரியான பிங்கல வருஷம், ஆனி மாதம், சுக்கில பக்ஷ பஞ்சமி தினத்தில், இந்தப்புராணம் முடிவுபெற்று விளங்குகிறது," என்பதேயாம். ஆதலால், குணபத்திராசாரியர் மகாபுராணஞ்செய்த காலம் கி. பி. 898 என நிச்சயமாய்த் தெரிகிறது. தலைமுறை ஒன்றுக்கு 25-வருஷ வீதம் வைத்து நோக்குமிடத்து, குருசிஷ்யமுறையுள்ள குணபத்திர முனிவருக்கும் மண்டலவனுக்கும் ஏறக்குறைய 25 வருஷங்களுக்கு மேலான காலவித்தியாசம் ஏற்பட நியாயமில்லை. ஆதலின், அக்குணபத்திர முனிவருடைய சீடரான "வீரைமன்னன் மண்டலவன்" இந்நிகண்டைச் செய்தகாலம் கி. பி. 898-ம் வருஷத்திற்கும் கி. பி. 925-ம் வருஷத்திற்கும் இடைப்பட்ட காலமே யாகவேண்டும்.

சென்னை சர்வகலாசாலையில் ஸம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளில் பண்டிதராயிருந்த M. சேஷகிரிசாஸ்திரிகள் தாம் செய்த "தமிழ்க்கவிசரிதம்," என்னும் நூலில் 13-ம் பக்கத்தில் "கி. பி. பதினைந்தாவது நூற்றாண்டில் இயற்றப்பட்ட சூடாமணி நிகண்டில்," என்று எழுதியிருக்கிறார். மகா-ள-ள-ஸ்ரீ M. பூர்ணலிங்கம் பிள்ளையவர்களும் சென்ற வருஷம் தாம் வெளிப்படுத்திய "A primer of Tamil Literature" தமிழ் நூலாசிரியர் சரித்திரச் சுருக்கம் 160-ம் பக்கத்தில் "மண்டல புருடர் விஜயநகர் அரசனான கிருஷ்ணராயன்காலத்தவர். 'கெடிமன்னர் வணங்குந்தாளான் கிருட்டினராயன் கைபோல்' என்பது அதனைக்குறிக்கிறது," என்று கூறியிருக்கிறார். மேற்படி செய்யுள் வருமாறு:—

"படைமயக்குற்றபோதும் படைமடமொன்றிலாதான்
மடைசெறிகட்கத்தோளான் மதிக்குடைமன்னர்மன்னன்
கெடிமன்னர் வணங்குந்தாவான்கிருட்டினராயன் கைபோற்
கொடைமடமென்றுமிசொல்ப வரையாதுகொடுத்தலாமே."

இச்செய்யுளில் குறித்திருக்கிற "கிருட்டினராயன்," ராஷ்டிரகூட நாட்டு "அகாலவருஷ கிருஷ்ண" ராஜனேயொழிய விஜயநகரத்துக் கிருஷ்ணராயன் அல்லன். ஏனெனில் குணபத்திராசாரியர் தமது மகாபுராணம் ராஷ்டிரகூட நாட்டு அரசன் அகாலவருஷன் காலத்தில் முடிவுபெற்றதென்று கூறியிருக்கிறார். அவரது மாணாக்கரும் தமது நூலான சூடாமணி நிகண்டில் மேற்சொன்னபடி கிருஷ்ணராயன் கொடையைப்பற்றிச் சிலாகித்துச் சொல்லியிருக்கிறார். இந்தக் கிருஷ்ணராயர் விஜயநகரத்துக் கிருஷ்ணராயர் என்றால் சுமார் அறுநூறு வருஷங்களுக்குப் பிந்திய காலமாக ஏற்படும். அதற்கு நியாயம் இல்லை. அகால வருஷ கிருஷ்ணராயருடைய சாஸனம் சகாப்தம் 810-ல் உளது கண்டறியப்பட்டிருக்கிறது. (Indian Antiquary) இந்தியன் ஆண்டிக்குவரி புத்தகம் 13, பக்கம் 64—68-ல் இருந்து, பிராசீனலேகனமாலா இரண்டாவது புத்தகம் 34-38-வது பக்கங்களில் அது எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. மேலும் அந்த ராஷ்டிரகூட அகால வருஷ கிருஷ்ணராயன் கி. பி. 875-ம் வருஷம் முதல் கி. பி. 911-ம் வருஷம் வரையில் அரசாண்டதாக (Sewell) ஸூவல்துரையவர்களுடைய (Lists of Antiquities) புத்தகம் 2, பக்கம் 233-ல் வியக்தமாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகையினால் இச்சூடாமணி நிகண்டின் காலம் மேற்சொன்னபடி கி. பி. 898-க்கு மேற்பட்டு கி. பி. 925-க்கு இடையிலுள்ள காலமேயாம்.

T. S. குப்புசாமி சாஸ்திரிகள்.

மதிவி. உலகம் பேதமை யென்பது
மாதர்க் கணியென வழங்கிய சொற்கோர்
சான்ரு யினனவ டன்மைதே ராதினித்
தான்றனி வருந்துந் தையலைக் காண்பான்
வல்லை யெழுக, மதிநுத லாய்! அவ
ளில்ல நண்ணி யியற்கையை நாடுதும்.

இருவரும் உள்ளேபிரவேசிக்க, காஞ்சனை உருவெளித் தோற்றங் கண்டு வருந்தி,

காஞ்சனை. நாயக! வடியா ளலிவெலா முணர்ந்தும்,
வாய்திறந் தோருரை வழங்கு கின்றிலை!
காண்பது நனவோ, கனவோ கண்டது? இங்
காண்டகை யுருவ மமைந்து நின்றதோ?
மாயமோ? வறியேன். மந்த காசமு,
நேயமுஞ் செவ்விய நிறைந்த முகமும்,
தந்தியின் கரம்போற் றழைத்த கையும்,
விந்த கிரிபோல் விளங்கிய புயமும்,
புலப்படா நின்றது, பொய்யோ? மெய்யோ?
வெலப்படா விவளென வேனிலான் றன்னுருக்
கரந்தென் ணுருயிர்க் காதலன் மான
வுருவம் பூண்டிவ ணெளிந்து வந்தனனோ?

மூர்த்தி. (தனியே) நில்லு! நில்லடி! நெஞ்ச மழிந்திவள்
பல்லுரை கூறிப் பரிவுறு கின்றனள்!

மதிவி. அணையிடந் துன்னி யமர்ந்தனள் தனியே;
துணையெனப் போந்தவர் தோன்று கின்றிலர்;
ஏழை! யெவருட னித்தனை வார்த்தை?

காஞ்சனை. (பொருக்கெனவெழுந்து). தோழியர்! வருக.

மூர்த்தி. தோகை! யென்னிது?
துணைவிழி கலங்கித், தொடிவளை நெகிழ்ந்து,
இணைமுலை யெழுந்துன் னிடைமிக நுடங்கி,
வருந்துவ தென்னை? மாதர் திலகமே!

(மதிவிலாசனி காஞ்சனையுடலைப் பரிசித்து.)

மதிவி. அருந்துணை யம்ம! அடிக்கின் றதுசுரம்.
வெந்தழ லொப்ப வெதும்பு கின்றது.
பைந்தொடி யாகம் படபடக் கின்றதே!

காஞ்சனை. பக்கத் திருமின்.

மூர்த்தி. பாவை யனையாய்!

துக்கசா கரத்தே சுழன்று வாடினம்.
ஊதையிற் பட்ட வொருமரக் கலம்போல்,
ஏதப் படப்பார்த் திருப்பது மியல்போ?
உடற்குறு பிணியா லொல்கினை யோ? வுளம்
படப்பல கவலை பற்றிய துண்டோ?
உற்ற வாறெலா மொளியா துரையாய்.
மற்றவை முடித்துன் மனக்குறை தீர்ப்பன்.

காஞ்சனை. (மதிவிலாசனியை நோக்கி.)

செய்யவள் பாத சேவைக் கான
துய்ய நறுமலர்த் தொடைய லாதிகள்
கொண்டிவண் வருக, கோதையே! முனிவ
ரண்டரும் பரவு மாலையஞ் செல்வாம்.

(மதிவிலாசனி வெளியே செல்ல.)

புனத்துட் குதித்திவண் போந்திம் மடத்
தினத்திற் றப்பி யிருந்ததிம் மானென,
மலர்க்கணை யைந்தும் வழங்கி, மாமோக
வலையெடுத் திங்கு மன்மத வேடன்,
குயிற்குழாங் கூவக் குரைகட லொலிப்பப்,
பயப்பய வந்து, படுத்த வருந்துமென்
மனப்பிணி மாற்ற மருந்துமுண் டாங்கொலோ?
கனக்குழை மேற்பொரு கயனெடுங் கண்ணாய்!
ஏதினி யென்ன விலக்கியங் கண்டனன்.
ஆதர வாக வமைதர விலக்கணங்
கொண்டபின் அன்றோ கூறுவன் காரிகை?

மூர்த்தி. வண்டறு நறுமலர் வார்குழன் மாதே!
இலக்கியங் கண்டதற் கேற்பச் சிலேடை
சொலப்புகுந் தனை; யுன் சொற்பொரு ளறிகிலன்.
பாங்கியர் மாட்டும் பகரொணச் செய்தி
ஈங்குனக் குளதென வெண்ணு கின்றிலன்.
வேட்கை யாவும் வெளிப்படை யாக,மென்
றோட்கிணை யில்லாத் தோகையே! சொல்வாய்.

காஞ்சனை. பதவியல் முற்றும் படித்தன னென்றலும்,

அதனுறுப் பிலக்கண மறையெனக் கேட்டல்போற்
கேட்டனே யாயினுங், கேள்வனே யொருத்தி
கூட்டுக வென்பார் குவலயத் துளரோ?
அறைகழல் பூண்ட வாடவர் திலகன்,
விரைகமழ் தாரான், விச்சுவ நாதன்,
வந்தெனே யிந்நாண் மருவிடா னென்னிற்,
சிந்தனே யுறுதுயர் செப்பவும் வேண்டுமோ?

மூர்த்தி. மெலியேல்! மெலியேல்! மெல்லியல்! அந்த
மலைநிகர் திண்டோன் மன்னவன் றன்பாற்
சென்றவற் கொணர்ந்து சேர்த்துவன்,
மன்றல் கண்டு மகிழ்ந்துநீ வாழ்கவே!

இரண்டாம் களம் முற்றிற்று.

அங்கம் 1—களம் 3.

அரசன் ஆக்ஞையைத் தாங்கிய தளகர்த்தன் நாகமன் தனது அரிய படைத்தலைவன் அரியநாதனே அழைத்துப் பாண்டிநாடு செல்லப் படையிட்டினையோவென்று வினவ, அவனும், "சேர்த்தனன். நாமுஞ் செல்லலாம்" என்றனன். அப்போது நாகமன் தன் வீட்டிலே வந்து தன்னைப் பயணஞ் செய்தனுப்பக்கூடினவர்கள் முன்னிலையில் தனது குமாரன் விசுவநாதனே, இளவரசன் அச்சுதப்பனிடத்தே சேர்ப்பித்து அவனுக்குப் பல் நன்மொழிகள் கூறினன். தாயாகிய மங்கம்மன் தன் புத்திரன் பிரிவாற்றாது கலங்கிவருந்தினள். அப்போது விசுவநாதன் தாயைத்தேற்றித் தந்தையுடன் செல்வதே தருமமெனக் கூறினன். பின்னர்ப் பாண்டியனும் சேனையும் உடன்வர நாகமன் போர்க்கோலங்கொண்டு போயினன்.

அங்கம் 1—களம் 3.

இடம்—நாகமன் வீட்டில் ஒரு சித்திரவறை; காலம்—காலை.
நாகமன்—மங்கம்ம—விசுவநாத—அரியநாத—அச்சுதப்ப
முதலானவர்கள் கூடியிருக்க.

நேரிசையாசிரியப்பா.

நாகம. (இளவரசைநோக்கி.)
அச்சுத! வரச னாணையை யறிவாய்.
கச்சைக் கடாம்பொழி களிறுதேர் காலாள்

புரவிப் படையும் புணர்ந்து பின்வரப்,
பரவை சூழும் பாண்டிநா டுற்றுப்,
பகைவனை வெல்லப் பயண மாயினன்.
நகுமணி யொளிர்தர நான்ற மாலையாய்!
நின்வயி னன்புறு நேயனும் நாதன்
தன்னை யுன்பாற் றந்தனன். பிரியா
தென்று மிரண்டுடற் கேன்றவோ ருயிர்போற்
றுன்றி வாழ்தற் றோழமைத் தாமால்.

அச்சுத. ஐய! விவன்றுணை யாருள ரெனக்குச்;
சைய மொருகாற் சலிக்கினுஞ் சலியேம்.
இன்பத் துன்ப மிரண்டிற் குடங்கையாய்,
அன்பெனுந் தளையா லார்க்கப் பட்டதாய்,
வன்பகை தொடர்ந்து வருத்திடிற் றன்பொரு
ளென்புயி ரியாவையு மீந்திடத் தக்கதாய்த்,
துலங்குத லன்றோ தோழமை யென்ப?
விலங்கிநீ ரேகுதல் விழைந்திங் கிருவரும்
பூத்த மலர்போற் பொலிதர விளங்கி
ஆத்தும யோக வானந்த வாரி
திளைத்துப் பருகித் தெவிட்டா திருந்து
களித்திடற் கேது காட்டி நின்றதே!

மங்கம்ம. (கண்ணீர் ததும்ப.)
காவலன் கான்முளை கழறிய வாசகம்
மேவிய வுவகை விளைத்த தாயினுங்,
குஞ்சைத் தனியே கூட்டி விருத்தி
யஞ்சிறைப் பறவை யகல்வது போல,—
தாயிலாப் பிள்ளைபோற் றனித்துறை தரவென்
சேயைப் பிரிந்து,—யான் சென்றிடக், கொடிய
விதிப்பய னிதுவாய் விளைந்தது கொல்லோ?
பதியுடன் சென்றுனைப் பாரா திருக்கவும்
இசையுமோ வென்னுளம், என்குலக் கொழுந்தே?
பசியறிந் துனக்குப் பாலமு தூட்டுவா
ரெவருளர்? எனைப்போ லெவரைத் தாயென
வுவகையோ டழைப்பாய்? ஒப்பிலா மணியே!

விசுவ. அன்னையே! உலகெலா மளிக்கின் றவர்தமக்
கென்னைக் காத்தற் கிரும்பொறை யாமோ?

அறைகழற் றந்தையா ரருளுநின் னன்பும்
இறைமகன் றுணையு மேற்றிடு வேற்குத்
தனிமை யெவணுறும்? தளரேல். உனது
மனனுறு கவலையை மாற்றித், தந்தை
யுடனுறச் சென்று, அவற் குறுபணி யியற்றிப்
புடையமர்ந் திருத்தல் புகழையே தருமால்.
அன்றியும், ஒருரை! அடையலார் தம்மை
வென்றிடற் கையன் விரைந்திடு காலையில்,
நீதுய ருழந்தனன் னிமித்த மன்றால்.

நாகம. நாதனே! உலக நயப்ப நவின்றனை.
தூய்மையே யுள்ளந் துணிதிற னன்று.
வாய்மையே மைந்த! மற்றுஞ் சிற்சில
நன்மொழி யுளதவை நாடிக் கோடியால்.
உண்ணினை வயலார்க் குரைக்கொணாது. ஆராய்ந்
தெண்ணிடா தொருதொழி லியற்றலொண் ணாது.
எவரொடும் பழகுக வினிது. தாழ்மையா
யவருடன் பயில லழகுடைத் தன்று.
குணங்கண் டொருவரைக் கூடுக. கூடின்,
இணங்கி யன்பெனு மெஃகாற் பிணிப்பாய்.
ஒருநாட் பழகுமுன் னுவந்தவர் தம்மைப்
பெருநட் பாளர்போற் பேணிப் புகழ்ந்தவர்க்
கொண்ணிதிச் செலவுசெய் துயர்விருந் திட்டுன்
கண்ணியங் கெடவீண் காலங் கழியேல்.
வலிய போர்க்கெழேல். வந்துனை யடைந்தார்
நலத்தை நோக்கி நயந்திட் டாயெனில்,
ஒன்னலர் வெருவ வோட்டி யுன்புகழ்
தன்னையே நானிலஞ் சாற்றிட நிற்பாய்.
எவருரை களையு மேற்றுக் கொள்கநீ.
உவகையோ டொருவற் குரைத்திட நினையேல்.
நின்வயிற் பிழையெவர் நிகழ்த்தினும், அதனை
நன்மொழி யாக நயந்து கொள்க.
ஒருவரைப் பற்றி யுனதபிப் பிராயம்
கருவது நினையேல். தகுதிக் கேற்ப
வாடையா பரண மணிந்து கொள்க.
ஆடம் பரங்க ளகற்றுக. ஏனெனின், —

உடைநடை தன்னால், ஒருவன் குணத்தை
யடைவுடன் காண்ப ரறிவுடை யார்கள்.
வண்பொருள் கொடுத்தல் வாங்க லுன்னேல்.
நண்பினை யகற்றும். நலிந்து கேட்பையேல்,
கடனை வாங்குதல் கணக்கறு செலவுக்
கிடனும். இல்விற் கிடரிழைத் திடுவதாம்.
ஆதலால், இவையெலா மறிந்துநீ மேலாம்
போத மேவிப் புகழுட னிற்பையேல்,
பொய்ப னென்றுனைப் புகன்றிடா ருலகில்.
ஐயனே! என்மொழி யனைத்துங் கொள்கவே.

(அரியநாதனைநோக்கி.)

மன்னவ னுணையும், மதிக்குலத் துதித்த
தென்னவன் குறையும், சேர முடிப்பான்
நின்றனன், வென்றி நினைந்த நெஞ்சுடன்.
குன்றுறழ் தோளினாய்! குரைகடற் றானையை
யீட்டினை யாயின், இன்னே வழுதி
நாட்டினை நோக்கி நடத்துக. நாமும்
எழுந்தனம்! எழுந்தனம்!

அரியநா. (இணையடியைத் தொழுது.) ஏற்றி யேற்றித்
தழும்புறு வரிசிலைத் தடக்கை வீர!
இடிகுரன் முரசொலி யெழுவெழுந் திட்டதிப்
படியினை வளைந்தவேழ் பரவை யாமெனத்,
திக்கெலா மொருவயிற் றிரண்ட தாமெனப்,
புக்கதுன் றானை, பொருவில் வீர; நின்
றிருவுளப் படியே சேர்க
விரிகதிர் முத்தம் விளைதமிழ் நாடே.

மூன்றாம் களம்—முற்றும்.

அங்கம் 1—களம் 4.

இக்களத்தில் காஞ்சனையின் காதல் மிக்குயர்ந்து வளர்தல் கூறப்படுகின்றது. உதாரணமாய், ஒருநாள் மாலைப்பொழுதில் அச்சுதன், விசுவநாதன் இருவருடனும் காஞ்சனை உத்தியான வனத்தில் உலாவிக்கொண்டு நிற்றலும்; அப்பொழுது விசுவநாதனுடைய மன்மதவடிவையும், கல்வித்திறத்தையும்,

வாக்கின் சாதுரியத்தையும், சற்குணத்தொகுதியையும், எண்ணங்களின் மேம்பாட்டையும், எளியவர்க்கிரங்குந் தன்மையையும், தெய்வபக்தியையும், அவர்கள் சம்பாஷணை மூலமாய்க் காஞ்சனையம்மன் அறிந்து வருந்தலும்; தானும் சம்பாஷணையிற் புகுந்து சோலையை வருணிப்பதுபோல இங்கிதமாகத் தன் கருத்து வெளிப்படச் சில வார்த்தையுரைத்தலும்; அவ் வார்த்தையைக் கேட்ட விசுவநாதனும் தனதுகருத்துக் குறிப்பாகத் தோற்றவும், தான் மேற்கொண்ட பக்திமார்க்கம் தனது வார்த்தையால் விளங்கவும், மறுமொழிகூறலும்; நன்கு புலப்படும். அச்சுதன் நினைவெல்லாம் தாழ்ந்த சிங்காரச் சுவையிலேயே பரந்து நிற்க விசுவநாதன் எண்ணங்களெல்லாம் மீதுயர்ந்து செழித்தல் புலப்படும்.

அங்கம் 1—களம் 4.

இடம்—உத்தியான வனம். காலம்—எற்பாடு.

அச்சுதப்ப—விசுவநாத—காஞ்சனையம்ம—ஒருசார்
பூக்கொய்து உரையாட

நேரிசை யாசிரியப்பா

அச்சுத. அகோ! பார் அன்ப! அழகொடு பொலிந்து
தொகாது பெருகுந் துய்ய மணங்கமழ்
மருதைத் தழுவி, வண்மலர்த் தோற்றி,
அருங்கொடி முல்லை யணைந்தது பாராய்!
அண்டமாம் புருடன் அங்கம் போர்த்துக்
கொண்ட படாம்போற் குலவுதல் காணாய்!

விசுவ. மாட்சிமை யாக மகிழ்ந்துநீ கண்ட
காட்சி யுண்மையே! கழறுவன் கேண்மோ.
மெலியார் வலியரை விரும்பிச் சேர்தலும்,
வலியா ரவரை மருவி வாழ்தலும்,
உலகிய லென்பதை உற்று நோக்குக.

அச்சுத. அலகிலாக் கேள்வி யறிவுடை யாய்! அதன்
பொருவறு மலரின் புதுமையென் சொல்கேன்!—
விரிதரு ககனம் விளங்குதா ரகையினஞ்

சொரிதருஞ் சோதியோ? சோமன் கிரணத்
துண்டத் தொகுதியோ? துலங்குவ காணாய்!

விசுவ. அம்மலர்க் கணையா லனங்கவே ளெய்து,
மம்மர் விளைத்து, மாதரை யலைப்பனல்!
ஏனைய மலர்தனக் கிணையிலை யென்றே
தானகை செய்து தயங்குவ காணாய்!
கொடியிடை நடங்கக் கொழுகொம் பேறிப்
படர்தர நின்ற பான்மையை நோக்கின்,
கடிமண மார்ந்துதங் கணவரைப் புல்லுந்
துடியிடைக் கனதனத் தோகையர் போலுமால்!

அச்சுத. மீதணிற் பிள்ளை மேவிக் கோதவோர்
மாதுளங் கனியவண் வபங்குதல் கூத்தர்
காலுயர் காம்புறக் கைத்தலந் தொங்கவிட்
டாலுத லொப்ப வசைவது பாராய்!

விசுவ. தீதற வெர்ருதொழிற் சிந்தனை யுறுவா
ராதர மாக வடங்கு மாறுபோல்,
காமா திகளெலாங் கலப்பவு மனைதைப்
போமா றுறுத்தைம் புலனையு மொடுக்கித்
தழைக்குடின் மேவித் தலைகீ ழாக
விழைக்கு மாதவ விருடிகட் கிணையெனப்,
பொருந்திய தவத்தைப் பூண்டிருக் கின்றது; என்
அருந்துணை வா! இதனகம்புற நோக்காய்!
நிறைமொழி மாந்தர் நீள்கலை பயின்று,
பொறையுட னடங்கிப் புகழ்பெறுந் தன்மைபோல்,
ஈண்டுநீ கண்ட விணையிலாக் கனியுட்
காண்டகு செந்நிறக் கற்களை நிகர்ப்ப
நீர்த்துளி நிரம்பி நிலவி: மேற்றோல்
போர்த்து நின்ற பொலிவையும் பாராய்!

காஞ்ச. (தனியே நின்று)
அச்சுத னுரைக்கெலாம், ஆங்கவ னுள்ளமும்
மெச்ச மெச்ச விளம்புகின் றான்விடை.
என்னே! இவன்கலை யிருந்தவா? இவன் குணம்
பொன்னே யெனில் அது புலகவும் பொருவுமோ?